EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 29

## சங்ககால தமிழ் இசைமரபில் நிகழ்த்துகைக் கலைஞர்கள்

*திரு. தங்கராசா கோபிநாத்*[1]

*[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (இசை - முழு நேரம்)*
*முதுதத்துவமாணி (இசை), முதுநுண்கலைமாணி (குரலிசை)*
*மின்னஞ்சல்: kopinathth89@gmail.com*

*ஆய்வு நெறியாளர்: முனைவர். ரெ. எழில்ராமன்*[2]

*[2]உதவிப்பேராசிரியர் இசைத்துறை,*
*அண்ணாமலைப்பலகைலைக்கழகம், சிதம்பரம்,*

## *முன்னுரை*

சங்ககங்கள் அமைத்து தமிழையும்இ தமிழிசையையும் வளர்த்த காலம் சங்க காலம் எனப்படுகின்றது. இக்காலத்தில் நிகழ்த்துக்கலைகலைகள் ஏராளமாக காணப்பட்டன. (இசை, கூத்து, வாத்தியம் வாசித்தல்) மக்கள் மனமகிழ்ந்து இரசிக்கும் நுட்பத்துடன்கூடிய மனித செயற்பாடுகள் நிகழ்த்துகைக் கலைகள் எனப்படுகின்றன. சங்க காலத்தில் நிகழ்த்துகை கலைகளை நிகழ்த்தியோர் நிகழ்த்துகைக் கலைஞர்கள் ஆவர். இவர்கள் பன்முகத்தன்மை கொண்ட பல்வேறு நிகழ்த்துகை கலை வடிவங்களை நிகழ்த்தக்கூடியவர்கள் ( அதாவது ஒரு சங்ககால நிகழ்த்துகைக் கலைஞர்கள்; பாடல், ஆடல், நடித்தல், இசைக்கருவிகளை திருத்தி வடிவமைத்தல்) என்பதனை இளஞ்சமுதாயத் தினருக்கும் அறிவிப்பதனை ஆய்வு நோக்காகமாகக் கொண்டுள்ளது. அத்துடன் வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு, சமுகவியல் ஆய்வு போன்ற ஆய்வியல் முறையியல்கள் ஊடாக ஆய்வுக்கட்டுரை எழுதபட்டுள்ளது.

சங்க கால நிகழ்த்துகைக் கலைஞர்களை 03 வகையினராக பிரிக்கலாம்.

## 1. குரலிசைக்கலைஞர்கள்

பாணர், விறலி, அகவலன்,அகவுநர், அகவர், அகவன் மகளிர், பாடுநர் ,பாடினி.

## 2.வாத்தியக்கலைஞர்கள்

இயவர், கோடியர், வயிரியர், கோவலன், கிணைவன், துடியன், முழவன், எயினர், கள்ளர், கொடிச்சி.

## 3.ஆடல் கலைஞர்கள்

விறலி, கூத்தர், பொருநர், கண்ணுளர், ஆடுநர், ஆடுமகள்.

## பாணர்

சங்க காலத்தில் மன்னர்கள்இ (இசையை) இசைக்கலையை வளர்க்க இசை வாணர்களை ஆதரித்துப் போற்றி வந்திருக்கின்றனர். மேலும் புலவர்களேஇ புரவலர்களை நாடிச்சென்று பரிசில் பெற்றமை இலக்கியங்களின் வழிப்புலனாகும். பாணர், விறலியர், கோடியர், இணையர், வயிரியர், போன்றோரை இசைக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவே இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பாணர்குடி அக்காலக் குடிகளில் சிறப்புடைய ஒன்றாக கருதப்படுகிறது. இதனைஇ

“துடியன் பாணன் பறையன கடம்பனென்று
இந்நான் கல்லது குடியுமில்லை” (புற: 335:7-8)

என்ற வரியின் மூலம் அறியலாம்.

## பாணர்களையே மூவகைப்படுத்திபாகுபாடுசெய்கின்றர

1.இசைப்பாணர்
2.யாழ்ப்பாணர்
3.பல்லியப்பாணர்.

## பாணர் பாகுபாடு

1.இசைப்பாணர் ஏர்க்களம் , போர்க்களம் , மாசூதர் , சூதர்

2.யாழ்ப்பாணர் பெரும்பாணர், சிறும்பாணர்

3.பல்லியப்பாணர் மண்டைப்பாணர் , கிளைப்பாணர் , பறையர் , துடியர் , கோடியர், தடாரிப்பாணர், வயிரியர்.

## பாணர்களும் பண்களும்

சங்க காலப்பாணர்கள் பண்களை குரலிசையாகவும்இ வாத்தியங்கள் மூலமாகவும் வாசித்து சங் கால இசையில் தனது பங்களிப்பை வழங்கியுள்ளனர். பாணர்கள் இசைக்கருவிகளை இசைத்துப்பாடல் பாடுபவர்கள் யாழில் பண்ணைப் பாடுவார்கள். இசையிலக்கண நூல்களில் கூறியுள்ள பண்முறைகளைத் தாண்டிப் புதிததாய் இனிய பண்களை இயற்றும் திறன் படைத்தவர்கள் ஆவார்கள்[2]. படுமலைஇ பாலைப் பண்களைப் பாடுவார்கள்.

## முல்லைப்பண்

சங்க காலத்தில் முல்லைப்பண்ணை ஐங்குறு நூற்றில் இரு இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாணன் முல்லைப் பண்ணைப்பாடினான்;. தலைவி முல்லை மலரைச் சூடினாள். அதனால் அவ்வீடு மாட்சிமை உடையதாயிருந்தது என்றும் பொருளில், பாணர் “முல்லை பாடச் சுடரிழை” எனும் அடி அமைந்துள்ளது. மற்றொரு பாடல் தலைவன் கூற்றாக இடம்பெறுகின்றத அடுத்து, “முல்லை நல்யாழ் பாண - மற்றெமக்கே” (ஐங்: 478: 5)

என்றும் பாவடி முல்லைப் பண்ணை நல்ல யாழிலே இசைக்கின்ற பாணனே! என்னுடைய தலைவியானவள் நான் வருவதற்கு காலம் தாழ்ச்சியமைக்கு வருத்த முற்றிருப்பாள். அவ்வருத்தத்தினை அன்பில்லாச் சொற்களால் சொல்லியருப்பாள்: அவற்றை அப்படியே என்னிடத்தில் கூறு என்றும் பொருள்பட அமைந்து உள்ளது. இவ்வாறு பாணனால் முல்லைப்பண் பாடப்பட்டது.

## மருதப்பண்

மருதத் திணைக்குரிய பெரும்பண் மருதப்பண் ஆகும் ஏழ் பெரும்பாலைகளில் மருதப்பண்ணே கோடிப்பாலை எனப்பட்டது என்பது யாழ் நூலார் கருத்து ஆகும்.

“மாலை மருதம் பண்ணி காலை” (புறம்: 149:2)

என்னும் புறப்பாடலடிஇ புரவலர் ஈந்த மிகுதியான பரிசுப்பொருட்களினால் தன்நிலை மறந்த பாணர்கள் மதிமயங்கி காலையில் பாட வேண்டிய மருதப்பண்ணை மாலையில் பாடிய செய்தியை அறியமுடிகின்றது. இதனைஇ அரசனை வாழ்த்துவதற்கு முன் மருதப்பண்ணில் இறைவனை வாழ்த்தி வழிபட்டுள்ள செய்தியை,

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்" (மலை:534)

என்னும் மலைபடுகடாம் பாடலடி தெளிவுப்படுத்தகின்றது மற்றம் வையை ஆற்றில் பொங்கிப் பெருகும் புதுநீரில் நீராடும் மக்கள் கூட்டத்தோடு யாழ்ப்பாணர்கள் மருதப்பண்ணைப்பாடி மகிழ்ந்தனர் .என்பதனை

"தெரி மருதம் பாடுப பிணி கொண் யாழ்ப்பாணர்"

என்ற அடி மூலம் அறிய முடிகின்றது எனக் கூறப்படுகின்றது எனலாம்.

## விறலி

இசைக்கலையில் வல்ல பாணர்குலப்பெண்கள் விறலியர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். பாடினி என்றும் அவர்களைக் குறிப்பிட்டுள்ளனர். பரிபாடலில் விறலியும்இ பாடினியும் வேறுபடுத்தப்பட்டுள்ள நிலையைக் காணமுடிகிறது.

'ஒரு திறம் பாடல் நல் விறலியர் ஒல்குபு நுடங்க' ( பரி: 17:15)
என்று விறலியரும்,
ஒரு திறம் பாடினி முதலும் பாலையங் குரலின்
நீடுகினர் கிழமை நிறைகுறை தோன்ற' (பரி: 17:17-18)

என்று பாடினியும் இருவகையில் ஒரே பாடலில் சிறிய வேறுபாட்டுடன் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. சிந்தனையைக் தூண்டுவதாகும். விறலி பாடி ஆடுகிறாள், பாடினி பாடுகிறாள் விறலியர் ஆடுவதை வேறு பாடல்களும் குறிப்பிட்டுள்ளன[3]. எனலாம்.

மற்றும் விறலி என்பவள் பாண்குலப்பெண். இவன் விறல்பட பாடுவதாலும் ஆடுவதாலும் இப்பெயரினைப் பெற்றிருக்கவேண்டும். 'விறல்பட' என்பது வேறுபடும்படியாக எனச் சுட்டலாம். வெவ்வேறு பண்களில் வகைப்படுத்திப் பாடுவதாலும், முகபாவனை வேறும்படும்படியாக ஆடுவதாலும் இவ்வாறு சுட்டியிருக்கலாம். இவள் இசையோடும் ஆடலோடும் தொடர்புடையவளாகச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

# சங்க கால வாத்தியக் கலைஞர்கள்

இசைக் கருவிகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம். பண்களை இசைக்கத் தகுந்தவாறு பண்ணிசைக் கருவிகள் என்றும்இ தாளத்தை பொருத்தமாகக் குறித்துச் சுவையுடன் ஒலிக்கும் கருவிகளாகக் தாளக்கருவிகள் என்றும் குறிப்பிடலாம். இசையெழுப்பும் வாயில்களைக் கொண்டு அவற்றை நரம்புக்கருவி, துளைக் கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி எனப் பிரிக்கலாம். அவை மரம். மூங்கில், நரம்பு, கயிறு, தோல் முதலியவற்றால் பல உருவில் செய்யப்பட்டுள்ளன. செய்பொருட்களும்,உருவமைப்பும் அவற்றின் இசைப்பயனுக்குத் தக்கவாறு கலையழகுடன் காணப்படும். இயற்கைப் பொருட்களான கொம்பு, சங்கு, போன்றவையும் இசைக்கருவிகளாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. வாத்தியத்தினை இசைக்க வாத்திய கலைஞர்களும் காணப்பட்டனர்.

# இயவர்

இயவர் என்னும் சொல்லை இயவு + அர் எனப் பகுக்கலாம். “இயவு என்றால் கருவிகள்” எனப்பொருள்படும். இயவுதல் என்றால் இசைத்தல் எனப் பொருள்படும். ‘இயவர்’ என்றால் இசைக்கருவிகளை இசைப்பவர் எனக் குறிப்பிடாமல் வாத்தியக்காரர் என்று பொதுவான பெயரிட்டு அழைக்கும் மரபு உண்டு. தட்டை தண்ணுமை குழல் ஆகிய இசைக்கருவிகளை இசைக்கும் இயவரைத்

> “தட்டைத் தண்மைப் பின்னர் இயவர்
> தீங்குழல் ஆம்பலின் இனிய இமிரும்” (ஐங் : 215: 3:4)

# கோடியர்

கோடு என்பது சங்குஇ விலங்கின் கொம்பு ஆகியவற்றைக் குறிப்பிடும் சொல்லாகும். சங்கு ஊதி இசையெழுப்புவோரைக் ‘கோடியர்’ என்று முதன்முதலில் குறிப்பிட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

> ‘சூரஞ்செல் கோடியர் கதுமென இசைக்கும்
> நரம்பொடு கொள்ளும் சுத்தம்’ (நற்:212:3-4)

# துடியன்

துடி என்னும் பறையை இசைப்பவன் துடியன் என்று அழைக்கப்பட்டான். போர்த் தொடக்கத்தைத் தெரிவிக்கத் துடியன் துடியை இசைப்பான். முல்லை நிலத்துச் சிறப்பைப் பாடும் மாங்குடிகிழார் துடியன், பறையன், பாணன், கடம்பன்,

என்றும் நான்கு பழங்குடியினரைச் சுட்டிக் காட்டுகின்றார். துடியன் முதலிடத்தில் இருப்பதை அறிய முடிகின்றது இதனை,

"துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான்கல்லது குடியும் இல்லை' (புறம் : 335: 7-8)

எனும் புறப்பாட்டு விளக்குகின்றது.[4]

## சங்க கால நடனக்கலைஞர்கள்

சங்ககால நடனக் கலைஞர்கள் பெரும்பாலும் ஆடிஇ பாடிஇ மற்றும் பாடிஇ ஆடி என இரு தனது ஆற்றுகைப்புலமைகளை வெளிகாட்டினார். சங்ககால மக்களது வாழ்வில் குழந்தை பிறத்தல் முதல் மனிதன் இறத்தல்வரை கலையின் அதாவது இசைஇ வாத்தியம்இ நடனம் போன்ற ஆற்றுகைகள் சடங் ரீதியாகவும். மற்றும் போர்க்களம். தொழில் ரீதியாகவும் இன்பஇ துன்ப நிகழ்வுகளில் முக்கிய அங்கம் வகித்தன என்றால் மிகையாகாது.

## ஆடுநர்

சங்ககால நடன நிகழ்த்துகை கலைஞர் நடன ஆற்றுகை கலைஞர் ஆடுநர் ஆவார். இவர் கூத்தரே என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் கூத்தாடிப் பரிசுபெறும் வழக்கம் உடையவர்கள் என்பதைக் கோப்பெருஞ் சோழனைப் புகழ்ந்து போற்றும் பொத்தியார் குறிப்பிடும்பொழுது

"ஆடுநர்க்கு ஈத்த பேரன் பினனே"(புறம்: 221:2)

## எனக் கூறப்பட்டுள்ளது

சங்ககால கலைஞர்களில் கண்ணுளர், ஆடுநர் இருவரும் மட்டுமே தனி நடனக்கலை ஆடுவதில் வல்லவர்கள். ஆனால் ஏனைய ஏராளமான கலைஞர்கள் இசைஇ வாத்தியம்இ நடனம்இ போன்ற மூன்று கலைகளில் புலமைக்கொண்டு சங்க கால கலைகளின் வளர்ச்சிக்கு முன்னோடியாக அயராது இன்ப, துன்ப சூழ்நிலைகளில் மத்தியில் பாடுபட்டனர் எனலாம்.

## ஆடுமகள்

ஆடுமகள் என்பவள் பாண்மரபைச் சேர்ந்த பெண் நடன நிகழ்த்துகை கலைஞர் ஆவாள். இச்சொல்லுக்கு விறலி என்றே பொருள் தருகின்றனர். ஆடுதல் என்பது இவர்களுடைய முதன்மையான தொழிலாக அமைந்துள்ளது. மற்றும் மூங்கில் கழிகளுக்கு மத்தியில் கட்டப்பட்ட கயிற்றிற்கு இடையே பல்வேறு இசைக்கருவிகளின் இசைக்கு ஏற்ப மயில் ஆடுவதைப்போல வெறியாட்டக் களத்தில் ஆடுமகள் நடுங்கி ஆடுவாள் இதனை,

"அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுமகள்

கயிறு ஊர் பாணியில் தளரும் சாரல்' (குறிஞ்சி:193-194)

எனும் பாவடிகள் விளக்குகின்றன. மற்றும் ஆடுமகளைத் தவிர பிறர் யாரும் நெருங்க முடியாத இயல்புடையது 'ஆய் அண்டிரனுடைய மலையாகும் என்றுஇ

'ஆடுமகள் குறுகின் அல்லது

பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே' (புறம்:128:6-7)

இவ்வடிகள் குறிப்பிடுகின்றன. மற்றம் இவள் ஆடுபவள் அரசர்களிடம் சென்று தனது ஆடலை புலமைக்காட்டி பரிசுஇ பொருட்களை பெற்று வருபவள் எனக் கூறப்பட்டுள்ளது.[5]

## முடிவுரை

சங்ககால நிகழ்த்துகைக் கலைஞர்களை தனி ஒரு நிகழ்த்துகைக்கலையில் தேர்ச்சி மிக்கவர் என சுட்டுவது கடினம். ஏனெனில் அனைத்து நிகழ்த்துகை கலைஞர்களும் இசைஇ ஆடல்இ கூத்துஇ இசைக்கருவியை வாசித்தபடி பாடுதல்இ பாடி ஆடுதல்இ இசைக்கருவிகளை திருத்துதல் போன்ற பன்முகத்தனமை கொண்ட கலைஞர்களாக காணப்பட்டனர். ஆனால் தற்கால நிகழ்த்துகைக் கலைஞர்கள் தனித்தனி நிகழ்த்துகை கலைகளில் மட்டும் தேர்ச்சி பெற்று நிகழ்த்துகை செய்கின்றனர். எனவே சங்ககால கலைஞர்களின் பன்முகத்தன்மை கொண்ட தேர்ச்சி தற்கால கலை உலகில் மிகவும் குறைவாக காணப்படுகின்றது. தற்காலத்தில் தமிழிசை வீறு நடை போடுவதற்கு சங்ககாலக் கலைஞர்களின் பன்முகத்தன்மைகொண்ட திறமைகளே காரணம் என்றால் எவராலும் மறைக்கவோஇ மறுக்கவோ முடியாது.

## அடிக்குறிப்புகள்

1. 1.வசந்தமாலை.இரா, தமிழரின் இசை நுகர்ப்பழக்கம், பக்-18.
2. 2.கோபிநாத்.த. சங்க கால நிகழ்த்துகை கலைஞர்கள் முதுநுண்கலைமாணி பட்டதிட்ட ஆய்வேடு, பக்- 86.
3. 3.பெருமாள் ஏ.என்., தமிழர் இசை, பக்-160.
4. 4.கலைவாணி. இரா. தமிழ்வேலு சு., சங்க இலக்கியத்தில் இசை, பக்-100.
5. 5.கோபிநாத்.த., சங்க கால நிகழ்த்துகை கலைஞர்கள், முதுநுண்கலைமாணி பட்டதிட்ட ஆய்வேடு, பக்-129

# துணை நின்ற நூல்கள்

1. 1.பெருமாள் ஏ.என். தமிழர் இசை,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,1984.
2. 2.வுசந்தமாலை.இரா, தமிழரின் இசை நுகர்ப்பழக்கம், சபாநாயகம் அச்சகம், சிதம்பரம், 1997.
3. 3.ஆதி நாராயணன்.கி, சங்ஙகாலம், பாரி புத்தகபண்ணை, சென்னை, முதற்பதிப்பு, 2016.
4. 4.கலைவாணி. இராச, தொல்காப்பியத்தில் இசை தொன்மையும் தொடர்ச்சியும், ஏழிசைப்பதிப்பகம், மயிலாடுதுறை, முதற்பதிப்பு, 2014.
5. 5.கலைவாணி. இரா., தமிழ்வேலு சு., சங்க இலக்கியத்தில் இசை, ஏழிசைப்பதிப்பகம், மயிலாடுதுறை, முதல்பதிப்பு, 2005.
6. 6.கோபிநாத்.த., சங்க கால நிகழ்த்துகை கலைஞர்கள், முதுநுண்கலைமாணி பட்டதிட்ட ஆய்வேடு, இசைத்துறை, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், சிதம்பரம், 2019.